

# ஸ்ரீ சேஷ ஒளி

## திருவருட்சுடர்



நிர்வாக ஆசிரியர் : குருஜி கே.வி.எல்.என். சர்மா

ஒளி – 6 காலாண்டிதழ் ஜனவரி – மார்ச் 2012 கதிர்–1


# காலங்கள் மாறினாலும் காட்சிகள் மாறுவதில்லை



காலதேவன் கையில் உள்ள கால சக்கரத்தின் மகிமைதான் என்னே! மனித வாழ்க்கையில் ஏற்படும் விநோதமான நிகழ்ச்சிகள், விபரீத விளைவுகள், அற்புதங்கள், குழப்பங்கள், சந்தோஷம் இவை அனைத்தையும் கலவையாக்கி அந்த சக்கரத்தின் சுழற்சி, விளைவுகளையும், தாக்கத்தையும் ஏற்படுத்துகிறது. அந்த தாக்குதலைத் தாங்கிப் பிடிக்க முடியாமல் தத்தளிக்கும் ஆன்மாக்கள் பல. வென்று, வாகை சூடி, மரணமில்லாப் பெருவாழ்வு அடைந்த ஆன்மாக்கள் சில அப்படி மரணமில்லாப் பெருவாழ்வு அடைந்த ஆன்மாக்கள் தான் உண்மையான சித்த புருஷர்கள். ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளைப் போன்று தோன்றும் அவதார சித்தர்கள். ஆசைகளைக் களைந்து, பேராசையை வென்று, பேரின்ப பெருவாழ்விற்கு வழி காட்டும் மகான்கள். ஆக்கப் பூர்வமான வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொடுத்து அழிவுப் பாதையிலிருந்து நம்மைக் காப்பாற்றி ஆனந்தத்தை தருபவர்கள்.

**உண்மை சித்தர்கள் என்பவர் யார்?**

மனித வாழ்க்கை உடல், பொருள், ஆவி என்ற மூன்று வகையில் அடங்கி விட்டது. உடல் மனித சரீரம், பொருள் இப்பிறவியில் என்ன செய்யப் போகிறோம் என்பதைப் பற்றியது. ஆவி நமது ஆன்மா, மாடம்பாக்கம் 18 சித்தர் சக்திபீடத்தை பொறுத்தவரையில் உடல், பொருள், ஆவியாக இருந்து வழிகாட்டி வருபவர் உலக மகா சூட்சும ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் ஆவார். வழிகாட்டுதலிலே இருவகை உண்டு. ஸ்தூலம் சூட்சுமம், ஸ்தூலம் என்பது கண்முன் தெரியும் நிலை. சூட்சுமம் என்பது கண்ணுக்குப் புலப்படாத உண்மை நிலை. ஸ்தூலமும், சூட்சமும் இணைந்து செயல்படும்பொழுது உண்மையான தெளிவான பேரறிவு நிலை உண்டாகிறது. இது ஞானம்.

ஞானம் என்பதை நாம் கடை வீதியில் சென்று வாங்க முடியாது. அனுபவித்து ஆராய்ச்சி செய்து, குழம்பி, குருஅருள் பெற்று தெளிவு அடைந்து பரிசுத்த நிலையை அடையவேண்டும். பரிசுத்த நிலை அடைந்த பிறகு காமம், குரோதம், லோபம், மோகம், மதம், ஆச்சரியம் என்ற இந்திரிய சுகங்களுக்கு அங்கே இடம் இல்லை.

இப்படிப்பட்ட சித்தத்தை சுத்தம் செய்து சத்து, சித்து ஆனந்த நிலையை அடைந்து, ஜீவனையே சிவனாக்கி இயங்கி வருபவர்கள் தான் உண்மையான சித்தர்கள். வயிற்றுப்பசி, காமப்பசி, ஆன்மீகப்பசி இவற்றை எல்லாம் ஆராய்ந்து, அனுபவித்து காற்றையே ஆகாரமா கக் கொண்டு அஷ்டமாசித்துக்கள் கைவரக் கூடிய வெட்ட வெளியிலே சூட்சும உடலுடன் அம்பிகையின் ஆணைக்கு கட்டுப் பட்டு, மனித வாழ்க் கையை சீர்படுத்தி, பிரச்சனைகளைத் தீர்த்து வைத்து, தெய்வீக ஆற்றலின் அருமை பெருமைகளை உணரவைத்து, சாமான்ய மனிதனையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்துபவர்கள்தான் உண்மையான 18 சித்தர்கள்.

இப்படிப்பட்ட மகத்தான மகத்துவங்கள் அடங்கிய அகில அண்டங்களுக்கு எல்லாம் நாயகியாக சித்தர்கள் எல்லோரும் வழிபட்ட வாலை பரமேஸ்வரியாக என் அன்னை ஸ்ரீ லலிதா மகா திரிபுர சுந்தரி ஆட்சி பீடத்தில் நாயகியாக மாடம்பாக்கம் சக்திபீடத்தில் அருளாட்சி செய்து வருகிறார்.

ஸ்ரீ காமேஸ்வரனோடு இணைந்து ஸ்ரீ காமேஸ் வரியாக, பிரபஞ்சத்தின் மையப் பொருளாக இருந்து 18 சித்தர்கள் பரிவா ரங்களாக அமர்ந்து அன்னையோடு இணைந்து சூட்சும இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த சக்தி பீடத்தை பொறுத்த மட்டில் இறை சக்திக்கும், மனித சக்திக்கும் இடையே தரகர்கள் யாரும் தேவை இல்லை. நீங்களே நேரிடையாக சித்தர்களோடு பேசலாம். உங்கள் குறை களை சொல்லலாம். மனம் விட்டு அழலாம். கதறலாம். புலம்பலாம். பகிர்ந்து கொள்ளலாம். உங்கள் மனச் சுமையை அங்கே இறக்கி வைக்கலாம். மன அமைதியோடு நீங்கள் செல்ல லாம். இங்கே இருக்கும் அர்ச்சகர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

மனிதன் மகான் ஆவது கடினம். மனிதனை கடவுளாகப் பார்க்கும் குற்றத்தை நாம் செய்யாமல் மகான்களையும் 18 சித்தர்களையும் வழிபட்டு ஆத்ம தாகம் தணிந்து ஆன்மீகப் பாதையில் தெளிவான நிலையில் நமது சித்தர்கள் சாம்ராஜ்யம் நோக்கி புனிதப்பயணம் தொடரட்டும். பேரொளி வழிகாட்டட் டும்.

காலங்கள் மாறினாலும், யுகங்கள் மாறினாலும், பிரளயங்கள் வந்தாலும் சித்தர்கள் தரும் காட்சிகள் என்றென்றும் மாறாது. காணக்கிடைக்காத காட்சிகளைக் காண்போம். கர்மாவைத் தொலைப்போம்.

ஆசிகள்
குருஜி

**வாசகர்கள் அனைவருக்கும்**
**இனிய புத்தாண்டு**
*மற்றும்*
**பொங்கல்**
**நல்வாழ்த்துக்கள்**

## குருஜியின் சஷ்டி அப்த பூர்த்தி விழா (60-ம் கல்யாணம்)

**ஸத்குருவின் அருளை நமக்கு அள்ளித் தந்த ஸர்வானந்தநாதர் ஸ்ரீ சேஷஞானி குருஜி திரு K.V.L.N. சர்மா அவர்களுக்கு**

**ஷஷ்டி அப்த பூர்த்தி**
*விழா*

நாள் : 24-1-2012, செவ்வாய்கிழமை
இடம் : ஸ்ரீசக்ர மகாமேரு 18 சித்தர் சக்திபீடம் எண். 1, சன்னதி தெரு, மாடம்பாக்கம், சென்னை - 600 126.

**அனைவரும் வருக!!**
**அருளாசி பெறுக!!**